Judicial Form No.53
(See Rule 42 )

**DEPOSITION OF WITNESS**

( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No. 45/2025 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 1 |
| | | Defence |
| | | Court |

Name : தமிழ்மோகன்

Father / Husband Name : ராமராஜ்

Village : பரளச்சி

Taluk : அருப்புக்கோட்டை

Caste :

Calling : சிறப்பு சார்பு ஆய்வாளர்

Religion :

Age : 58

(எதிரி ஆஜரில்லை, மனுத்தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது. எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு.எம்.சுப்பையா மற்றும் திருமதி.ஜி.ராதா ஆகியோர் எதிரியை அடையாளம் காட்டுவது பொருட்டு தாங்கள் எவ்வித ஆட்சேபணையும் செய்யவில்லை என்றும், ஆகையால் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகாத போதிலும் விசாரணை தொடரலாம் என

கூறியதின் அடிப்படையில் சாட்சியின் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 04.03.2026

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது பரளச்சி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.05.2022 அன்று பரளச்சி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பரளச்சி மேலயூர் மெயின்ரோட்டில் உள்ள சரண்யா பலசரக்கு கடையை சோதனை செய்த போது கேரி பைக்குகளுக்கு நடுவில் கணேஷ் புகையிலை – 20 கிராம் கொண்ட 8 பாக்கெட்டுகள், கூலிப் – 10 கிராம் எடை கொண்ட 10 பாக்கெட்டுகள் ஆகியவை கடையின் பின்புறத்தில் காணப்பட்டது.

2. மேலும் கடையில் பணிபுரிந்த விஜயகுமார் முன்னிலையில் மேற்சொன்ன பொருட்களை எடுத்தோம். மேற்சொன்ன பொருட்களை சார்பு ஆய்வாளர் காவல்நிலையத்திற்கு எடுத்து வந்தார். விஜயகுமாரை காவல்நிலையத்திற்கு வரச்சொல்லிவிட்டு வந்தார். நாங்கள் கடையில் நண்பகல் 12.45 மணியளவில் மேற்சொன்ன புகையிலை பொருட்களை எடுத்தோம். பின்னர் 1.30 மணிக்கு மேற்சொன்ன விஜயகுமார் நிலையத்தில் ஆஜரானார். அவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு சார்பு ஆய்வாளர் அனுப்பி வைத்தார். மேற்சொன்ன சார்பு ஆய்வாளர் ராஜேஷ்குமார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

3. நாங்கள் ரோந்து பணிக்கு சென்ற போது நிலைய பொறுப்பு பாரா வசம் இருந்தது. அச்சமயம் யார் பாரா என்று எனக்கு நினைவில்லை. எதிரியை பாரா வசம் காவல்நிலையத்தில் ஒப்படைத்தோம். எதிரியின் கடையிலிருந்து கைப்பற்றப்பட்ட புகையிலை பொருட்களை பாரா வசம்

ஒப்படைத்தோம். மேற்சொன்ன பொருட்கள் எந்த தேதியில் பகுப்பாய்வு கூடத்திற்கு பரிசோதனைக்கு அனுப்பபட்டது என்று எனக்கு தெரியாது. எவ்வளவு அளவுகள் கொண்ட பொருட்கள் பகுப்பாய்விற்காக அனுப்பபட்டது என்று எனக்கு தெரியாது. பரிசோதனைக்கு உட்படுததினால் தான் மேற்சொன்ன புகையிலை பொருட்கள் மனித உயிருக்கு தீங்கு விளைவிக்ககூடியது என்ற முடிவுக்கு வரமுடியும் என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு கைப்பற்றப்பட்ட பொருட்களை எப்பொழுது அனுப்பினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பொதுமக்கள் யாரும் தனியாக புகார் மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். பொதுமக்களில் யாரும் எதிரியின் கடையிலிருந்து புகையிலை பொருட்களை வாங்கி பயன்படுத்தியதின் காரணமாக தங்களுக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டது என்று எவ்வித புகாரும் அளிக்கவில்லை என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

4. ரோந்துக்கு சென்றபோது நானும், முதல்நிலை காவலரும் ஒரு இருசக்கரவாகனத்திலும், சார்பு ஆய்வாளர் தனியாக வேறு ஒரு இரு சக்கர வாகனத்திலும் வந்தார். நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் ரோந்து செல்லவில்லை என்றும், பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றும், அந்த பொருட்களை காவல்நிலையத்திற்கு கொண்டுவரவில்லை என்று சொன்னால் சரியல்ல. சந்தேகத்தின் பேரில் எதிரியை காவல்நிலையத்திற்கு வரவழைத்து நிலையத்திலிருந்த பொருட்களை வைத்து எதிரியின் மீது பொய் வழக்கு புனைந்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொன்னமாதிரி என்னை சார்பு ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

M VASANTHA KUMAR

Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.03.04 18:23:14 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.

Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No. 45/2025 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 2 |
| | | Defence |
| | | Court |

Name : ராஜ்குமார்

Father / Husband Name : மாரியப்பன்

Village : திருச்சுழி

Taluk : திருச்சுழி

Caste :

Calling : தலைமை காவலர்

Religion :

Age : 40

(எதிரி ஆஜரில்லை, மனுத்தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது. எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு.எம்.சுப்பையா மற்றும் திருமதி.ஜி.ராதா ஆகியோர் எதிரியை அடையாளம் காட்டுவது பொருட்டு தாங்கள் எவ்வித ஆட்சேபணையும் செய்யவில்லை என்றும், ஆகையால் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகாத போதிலும் விசாரணை தொடரலாம் என

கூறியதின் அடிப்படையில் சாட்சியின் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 04.03.2026

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது திருச்சுழி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.05.2022 அன்று பரளச்சி காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியிலிருந்தபோது சார்பு ஆய்வாளர் ராஜேஷ்குமார் அவர்களுக்கு 13.00 மணியளவில் கிடைத்த இரகசிய தகவலின் பேரில் சார்பு ஆய்வாளர் ராஜேஷ்குமார், நான் மற்றும் அ.சா.1 ஆகியோர் போதை பொருள் மற்றும் புகையிலை தொடர்பான ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது சார்பு ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பரளச்சி மேலபூர் மெயின்ரோட்டில் உள்ள சரண்யா பலசரக்கு கடையை சோதனை செய்த போது கடையின் பின்பகுதியில் அரசால் தடை செய்யப்பட்ட 701 கணேஷ் புகையிலை – 20 கிராம் எடை கொண்ட 8 பாக்கெட்டுகள் மற்றும் கூலிப் – 10 கிராம் எடை கொண்ட 10 பாக்கெட்டுகள் ஆகியவை கேரி பேக்கில் காணப்பட்டது.

2. அங்கிருந்த கடையின் உரிமையாளரான விஜயகுமாரை அழைத்து சார்பு ஆய்வாளர் அவர்கள் மேற்சொன்ன பொருட்கள் மனித உயிருக்கு தீங்கு விளைவிக்ககூடியது என்றும், அவை அரசால் தடை செய்யப்பட்ட பொருட்கள் என்றும் கூறினார். ஆகையால் தடை செய்யப்பட்ட பொருட்களை வைத்திருந்த காரணத்திற்காக அவரை கைது செய்வதாக கூறி மேற்சொன்ன பொருட்களை அத்தாட்சியின் மூலம் சார்பு ஆய்வாளர் அவர்கள் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படுவது தான் சார்பு ஆய்வாளர் தயாரித்த அத்தாட்சி ஆகும். **அந்த அத்தாட்சி அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த

அத்தாட்சியில் நான் இரண்டாவதாக சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். முதலில் இருக்கும் சாட்சி கையெழுத்து தலைமை காவலர் தமிழ்மோகன் (அ.சா.1) கையெழுத்தாகும்.

3. எதிரி விஜயகுமார் தடை செய்யப்பட்ட பொருட்களை வைத்திருந்தாக கூறி அவரை கைதுக்கான காரணம் கூறி 13.30 மணியளவில் கைது செய்து நிலையத்திற்கு அழைத்து வந்தார். **எதிரியின் கடையிலிருந்து கைப்பற்றப்பட்ட 701 கணேஷ் புகையிலை – 20 கிராம் எடை கொண்ட 8 பாக்கெட்டுகள் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கூலிப் – 10 கிராம் எடை கொண்ட 10 பாக்கெட்டுகள் சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை ஆய்வாளரும், சார்பு ஆய்வாளர் ராஜேஷ்குமார் அவர்களும் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

4. நாங்கள் ரோந்து பணிக்கு சென்ற போது காவல்நிலையத்தின் பொறுப்பு எழுத்தர் வசம் இருந்தது. அந்த எழுத்தர் தலைமை காவலர் 2235 பொன்இருளன் ஆவார். எதிரியையும் வழக்கு சொத்துக்களையும் நிலைய எழுத்தர் வசம் ஒப்படைத்தோம். சார்பு ஆய்வாளரும் நாங்களும் பொருட்களுடன் நிலையத்திற்கு வந்துவிட்டோம் என்று சாட்சி கூறுகிறார். சம்பவ இடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை. அ.த.சா.ஆ.1 அத்தாட்சியில் குற்ற எண் 27/2022 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் காவல்நிலையம் வந்த பின்பு தான் ஆலோசித்து தான் குற்ற எண்ணை அ.த.சா.ஆ.1 அத்தாட்சியில் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான்.

5. அ.த.சா.ஆ.1 அத்தாட்சியில் கண்ட வாசகங்கள் அனைத்தும் தலைமை காவலர் வேல்முருகனின் கையெழுத்து என்று சொல்வது தவறு.

அ.த.சா.ஆ.1 அத்தாட்சியில் கண்ட வாசகங்களை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. சாட்சி சிறிது நொடிகள் கழித்து சார்பு ஆய்வாளர் தான் அ.த.சா.ஆ.1 அத்தாட்சியை எழுதினார் என்று சாட்சி கூறுகிறார். அத்தாட்சியை சம்பவ இடத்தில் வைத்து தான் சார்பு ஆய்வாளர் தயார் செய்தார். சார்பு ஆய்வாளர் நிலைய அலுவலர் என்பதால் அவருக்கு குற்ற எண் எவ்வளவு பதிவாகியுள்ளது என்று தெரியும். அதனால் அத்தாட்சியில் குற்ற எண் குறிப்பிட்டுள்ளார். நான் சார்பு ஆய்வாளருக்காக ஆவணங்களை அனுசரித்து தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அத்தாட்சி காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொல்வது தவறு.

6. பொதுமக்கள் யாரும் தனியாக புகார் மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். பொதுமக்களில் யாரும் எதிரியின் கடையிலிருந்து புகையிலை பொருட்களை வாங்கி பயன்படுத்தியதின் காரணமாக தங்களுக்கு உடல்நிலை பாதிப்பு ஏற்பட்டது என்று எவ்வித புகாரும் அளிக்கவில்லை என்றால் சரிதான். நானோ, சார்பு ஆய்வாளரோ, தலைமை காவலரோ தனி அறிக்கையோ, புகார் மனுவோ கொடுக்கவில்லை என்றால் சரிதான். பொருட்களை கைப்பற்றியவுடன் அதனை மூடி முத்திரையிடவில்லை என்றால் சரிதான். கேரிபேக்கை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். கேரி பேக்கில் தான் பொருட்களை கொண்டு வந்தோம் என்று சாட்சி கூறுகிறார். நீதிமன்றத்தில் சான்று பொருட்களை எப்போது ஒப்படைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் ரோந்து செல்லவில்லை என்றும், பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றும், அந்த பொருட்களை காவல்நிலையத்திற்கு கொண்டுவரவில்லை என்று சொன்னால் சரியல்ல. சந்தேகத்தின் பேரில்

எதிரியை காவல்நிலையத்திற்கு வரவழைத்து நிலையத்திலிருந்த பொருட்களை வைத்து எதிரியின் மீது பொய் வழக்கு புனைந்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொன்னமாதிரி என்னை சார்பு ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக இந்த வழக்கை போட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

M VASANTHA KUMAR
Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.03.04 18:23:25 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.